# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 04 செவ்வாய்க்கிழமை (21-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 30

8


## ராமதாஸிற்கு 'வீஸா' மறுப்பு

# அமெரிக்கத் தடையை எதிர்த்து

# திருச்சியில் நேற்று ஆர்ப்பாட்டம்

சென்னை, ஒக். 21

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அமெரிக்கா செல்வதற்கு ''வீஸா'' வழங்க அமெரிக்கத் தூதரகம் மறுப்புத் தெரிவித்துள்ளது அதனையடுத்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அக்கட்சியின் மகளிர் அணியினர் நேற்று திருச்சியில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மகளிர் அணியைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் நூற்றுக்கணக்கான ''கொக்காகோலா'' ''செவன் அப்'' ஆகிய அமெரிக்க நிறுவனங்களின் தயாரிப்பான குளிர்ப்பானப் போத்தல்களை அடித்து நொறுக்கினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமெரிக்கா அண்மையில் பயங்கரவாத அமைப்பாக அறிவித்ததை அடுத்து தமிழகத்தில் உள்ள புலிகளின் ஆதரவாளர்கள் மீதும் அமெரிக்கா சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்த வகையிலேயே டாக்டர் ராமதாஸ் அமெரிக்கா செல்ல ''வீஸா'' மறுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாட்டாளி மக்கள் கட்சியும் அதன் நிறுவுனர் டாக்டர் ராமதாஸும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கி வருவதாகத் தெரிவித்தே அவருக்கு 'வீஸா' வழங்க அமெரிக்கத்தூதரகம் மறுத்துள்ளது.

## 5 இந்தோனேசிய மாலுமிகள் கொழும்பில் தலைமறைவு

கொழும்பு, ஒக். 21

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த இந்தோனேசியாக் கப்பல் ஒன்றின் மாலுமிகள் ஐவர் காணாமற் போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜக்கார்த்தாவில் இருந்து கொழும்புக்கு வந்த ''எம்.வி. அக்ரா'' என்ற கப்பலின் மாலுமிகளே காணாமற் போயுள்ளனர்.

இவர்கள் ஐவரும் காணாமற் போனமை பற்றி கப்பலின் தலைவர் கொழும்பு துறைமுகப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ-9)

## மர்மப் பொருளைக் குத்தியவர் மணிக்கட்டுடன் கைகள் இழப்பு

தோட்டத்தில் காணப்பட்ட இனந்தெரியாத பொருளொன்றை எடுத்துக் குத்திப் பரிசோதித்த ஒருவர், அது வெடித்துச் சிதறியதில் இரு கைகளையும் மணிக்கட்டுடன் இழந்தார். அவரது நெஞ்சிலும், முகத்திலும் பலத்த காயம் ஏற்பட்டது.

அச்செழுப் பகுதியில் ஒரு தோட்டத்தில் நேற்றுக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இணைப்பில் விடாப்பிடியாக நிற்க தமிழ்க் கட்சிகள் முடிவு!

## இறுதி முடிவு எடுப்பதற்காக தெரிவுக்குழு இன்று கூடும்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 21

இனப் பிரச்சினைக்கான தீர்வு, அரசமைப்புச் சீர்திருத்தம் ஆகியவை குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்காக இன்று மாலை கொழும்பில் கூடவுள்ளது.

வடக்கு-கிழக்கு இணைந்திருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப் படவேண்டும் என்று அரசுத் தரப்பு யோசனையில் கூறப்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்வதில்லை என்பதில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் விடாப்பிடியாக இருப்பதாகத் தெரியவருகின்றது.

அரசுத் தரப்பு யோசனைகள் இன்று தெரிவுக் குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

அரசுத் தரப்பு யோசனைகளை வரவேற்றுள்ள தமிழ்க் கட்சிகள் —

இணைப்பு, ஆட்சி அலகு, ஆட்சிமுறை, காணி அதிகாரம், பொலீஸ் ஆணைக் குழு, போன்ற விடயங்களில் தங்களுக்கு அதிருப்தி இருப்பதால் அரசுத் தரப்பு யோசனைகளை முற்றாக அங்கீகரிக்க முடியவில்லை என்று அரசுத் தரப்புக்கு எடுத்துக் கூறியுள்ளன.

அரசு, தான் தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள யோசனைகளை தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை வடிவமாக மாற்றுவதற்கும் —

தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை வடிவமாக நாடாளுமன்றத்துக்கு அதனைச் சமர்ப்பிப்பதற்கும் —

விரும்புவதாக தெரிகின்றது. எனினும் அதற்கு ஐ. தே. கட்சி இணங்க மாட்டாது என்று கூறப்படுகின்றது.

என்றாலும் தான் சமர்ப்பித்துள்ள யோசனைகளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைப்பிராயில் இரு யுவதிகள் கைது

யாழ்ப்பாணம், ஒக். 21

கட்டைப்பிராய் பகுதியில் கடந்த ஞாயிறு மாலை சகோதரிகளான இரு இளம் யுவதிகள் சந்தேகத்தின் பேரில் படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் அப்பகுதி தையலகம் ஒன்றில் வேலை செய்து வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9-109)

## மின் கம்பத்தில் சடலம்

மட்டக்களப்பு, ஒக். 21

மட்டக்களப்பு மாவட்டம் துறை நீலாவணையில் மின் கம்பம் ஒன்றில் கட்டப்பட்டிருந்த சடலம் ஒன்றை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

தமிழ்க்குழு ஒன்றுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் விடுதலைப் புலிகளால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனந்தெரியாத இச்சடலம் அடையாளம் காண்பதற்காக கல்முனை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கிறது. [ஐ-21]

## அம்பாறையில் ஊர்காவலர் பலி

யாழ்ப்பாணம், ஒக். 21

அம்பாறை மாவட்டம் வெகரஹம என்னும் இடத்தில் அமைந்துள்ள ஊர்காவல் படையினரின் நிலை மீது கடந்த சனியன்று காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஊர்காவல் படை வீரர் ஒருவர் பலியானார்.

51 ஆவது படையணியின் செய்திக் குறிப்பில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## கொழும்பு பாதுகாப்பு

கொழும்பு, ஒக். 21

கொழும்பு நகரின் பாதுகாப்பு இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்படவிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டையில் நடந்த குண்டுத் தாக்குதலை அடுத்தே இதுபற்றி ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது, (ஐ)

## கண்டியில் தமிழ் வர்த்தகர் கைது

கொழும்பு, ஒக 21

கொழும்பு கோட்டையில் இடம்பெற்ற வாகனக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் உயர்மட்ட புலனாய்வுப் பிரிவினர் கண்டியில் வைத்து சிறி என்ற தமிழ் வர்த்தகரைக் கைசெய்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்க சந்தேச நபர்கள் நால்வர் கொழும்பில் இருந்து கண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். கண்டி, கட்டுகஸ்தோட்டை பகுதியில் வைத்து இவர்கள் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## டியூட்டறிக்குள் புகுந்த நாய் அட்டகாசம்!

### 4 மாணவியரைக் கடித்தது

யாழ்ப்பாணம், ஒக். 21

தனியார் கல்வி நிறுவனமொன்றில் வகுப்பினுள் நுழைந்த நாயொன்று எதிர்பாராதவிதமாக அங்கே படித்துக் கொண்டிருந்த மாணவிகளில் நால்வரைக் கடித்துக் குதறிவிட்டு ஓடி மறைந்தது.

பருத்தித்துறை தம்பசிட்டி வீதியில் (வட இந்து பாடசாலைக்கு அருகில்) இருக்கும் தனியார் கல்வி நிறுவனத்தில் நேற்று முன்தினம் (ஞாயிறு) காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் பருத்தித்துறை பன்னைக்கட்டையைச் சேர்ந்த இரவீந்திரன் ரதிதேவி (வயது 14), தம்பசிட்டியைச் சேர்ந்த எஸ். மாலதி (வயது 14), ஆத்தியடியைச் சேர்ந்த எஸ். பிருந்தா (வயது 14), தம்பசிட்டியைச் சேர்ந்த தர்சினி (வயது 14) ஆகிய நான்கு மாணவியர்களே காயமடைந்தவர்களாவர். இவர்கள் 10 ஆம் ஆண்டு மாணவியராவர்.

நாயினால் கடியுண்டவர்கள், கல்வி நிறுவன இயக்குனரின் உதவியுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுச் சென்றனர்.

மாணவியரைக் கடித்த இந்த நாய் விசர் நாயாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (உ-15)

## கிரானில் மாணவன் சூட்டுக்குப் பலி!

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியிலுள்ள கிரான் பகுதியில் கடந்த ஞாயிறன்று இரவு பாடசாலை மாணவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

பெரியதம்பி சந்திர[illegible] (வயது 19) என்ற மாணவனே பலியானவராவார்.

விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் அகப்பட்டே இவர் உயிரிழந்தார் எனப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 - 10 - 97 ஆம் திகதி வல்லிபுர ஆழ்வார் ஆலய முன்றலில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட

# சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு இலக்கம் 406
2 ஆம் பரிசு இலக்கம் 116
3 ஆம் பரிசு இலக்கம் 15

ஆறுதல் பரிசில்களுக்கான இலக்கங்கள்
1321 1840 2040 375 1330 594

மேற் குறித்த இலக்கங்களுக்குரியவர்கள், இம் மாதம் 31 - 10 - 97 க்கு முன் நேரில் வந்து தமது பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

செல்வி செ. ரூபரஜனி
பொறுப்பாளர்

அன்பு மலர் பாலர் பாடசாலை,
உத்திராவத்தை,
புலோலி கிழக்கு, [சி-1826]

# வாழ்த்துகின்றோம்

**நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின்**
பரிசளிப்பு வைபவத்தில் பரிசு பெறும் மாணவர்களையும் அவர்களின் வெற்றிக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து பாடசாலையின் வளர்ச்சிக்கு அச்சாணியாக இருக்கும் அதிபரையும் அவருடன் தோளோடு தோள் நின்று உழைக்கும் ஆசிரியர்களையும் வாழ்த்துகிறோம்.

சி. அகிலதாஸ்
**நெல்லைக்குமரன் ரேடர்ஸ்**
மத்திய சந்தை, நெல்லியடி
(சி-1827)

## நெல்லியடி மெ. மி. த. க பாடசாலை
## திருமதி இந்திராணி பாஸ்கரன்
## புலமைப்பரிசில் நிதியப் பரிசளிப்பு விழாவும் வருடாந்த பரிசளிப்பும்

காலம்: **21 - 10 - 97** செவ்வாய்
பிற்பகல் 2 மணி

இடம்: பாடசாலை மண்டபம்.

தலைவர்:
திரு. வ. கணேசமூர்த்தி [ அதிபர் ]
பிரதம விருந்தினர்:
திரு. சி. சிவராசா
[ கல்விப்பணிப்பாளர் யாழ். வலயம் II ]
சிறப்பு விருந்தினர்:
திரு. செ. ஸ்ரீநிவாசன்
[ பிரதேச செயலர், கரவெட்டி ]
பரிசில் வழங்குபவர்:
திருமதி ஸ்ரீ. சிவராசா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பாடசாலை அபிவிருத்திச்சபை,
பழைய மாணவர் சங்கம்

அன்பளிப்பு:
**நெல்லைக் குமரன் ரேடர்ஸ்**
மத்தியசந்தை, நெல்லியடி.
[ சி/1828 ]

# கண்ணீர் அஞ்சலி

**திருமதி அன்னம்மா தங்கவேலாயுதம்**
(சுரேகிரி, வேதக் கோயிலடி, உடுப்பிட்டி)

சங்க உறுப்பினரும் தமிழ் தட்டெழுத்தாளருமான
**திருமதி மாலினி தங்கரூபன்**
அவர்களின் அன்புத் தாயார் திருமதி அன்னம்மா தங்கவேலாயுதம் அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்க உறுப்பினர்கள்.**

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி, (சி/1832)

## சமய சந்நிதியில்

சித்தன் கேணி தனுவோடைப்பதி அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரப் பெருமாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக விழா நாளை காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

கடந்த நான்கு நாள்களாக நடைபெற்று வரும் ஆரம்ப கிரியை நிகழ்வுகளில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழ்வு இடம்பெறும். (இ-9 30)

★ ★ ★

தெல்லிப்பளை அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி கோயிலின் மண்டலாபிஷேகப் பூர்த்தி வைபவம் இன்று நடைபெறுகிறது.

அதிகாலை 5.30 மணிக்கு பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு கலச சங்காபிஷேகம் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து விசேட பூசை மகாகும்பாபிஷேக மலர் வெளியீட்டு நிகழ்வு நடைபெறும்.

பின் அம்பாள் வீதியுலாவை அடுத்து, அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (இ-9-30)

## தொழில் நுட்ப ஆசிரியர் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக். 21

தொழில் நுட்ப கைப்பணி பாடம் கற்பிப்பதற்கான தகுதிகாண் ஆசிரிய பதவிக்கு ஐந்து பேர் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக வலயம் -2 கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா அறிவித்துள்ளார்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ என். ஆனந்தக்குமார் — நீலியம்பளை, மல்லாகம்.
★ வி. இந்திரன் — அராலி றோட், சங்கானை.
★ ப. சிவனேஸ்வரன் — தென்னின் காவற்றை, புலோலி தெற்கு.
★ எஸ். திருவிளங்கம் — மே/பா; எஸ் வி மகேந்திரம் சிவன் வீதி, உரும்பிராய்.
★ கே. பிறைசூடி — சுழிபுரம் கிழக்கு.

இவர்கள் அனைவரையும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்வி வலயம் -2 பணிமனைக்குச் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)

பிரதிக்கு
**முந்துங்கள்**
குறுகிய இடை
வெளிக்குப் பின்
தென் இந்திய வார
மாத சஞ்சிகைகள்
விற்பனையாகின்றன.
**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(50694)

# யூனிவேர்சல்
கந்தர்மடம்.
**98, 99 A/L**
இந்துநாகரிகம்
இந்துசமயம்
**திரு. சிவ மகாலிங்கம்**
திங். செவ். புதன். வியா.
காலை 7.00 மணிக்கு
நடைபெறுகின்றது.
(50691)

## தீபாவளியை முன்னிட்டு வர்த்தகர்களுக்கு

மீண்டும் மொத்த வியாபாரம்
நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஜெயா அழகு மாடம்**
127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(பரடைஸ் ஹோட்டலுக்கு அருகில்) [சி/1829]

## அரியாலை ஐக்கிய கழக பொன் விழா 1997

சுற்றுப்போட்டி - 3

# உதைபந்தாட்டப் போட்டி

(அமரர் E. K. குமரையா ஞாபகார்த்தக் கேடயத்திற்கானது)
(வடமாகாண ரீதியில்)

1. விண்ணப்ப திகதி **5 — 11 — 97** புதன்கிழமை
2. விண்ணப்பப்பத்திரம்:- ரூபா **100**
3. **9** பேர் கொண்ட குழு
4. யாழ். உதைபந்தாட்டச் சங்க விதிகளிற்கேற்ப போட்டிகள் நடத்தப்படும்.
5. மேலதிக விவரங்களுக்கு

**தலைவர்,**
200A, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

**ம. விஜயகுமார்,**
(பொறுப்பாளர்)
குறுக்கு ஒழுங்கை,
ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

மிக விரைவில்!!
சுற்றுப் போட்டி- 4
**வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள்**
வடமாகாண ரீதியில் - உள்ளூர்
(50687)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் பொ. கேதாரநாதன் அவர்கள்**
(முன்னாள் அதிபர், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம்)
திதி: **21—10—97**

கேதாரநாதன் சாந்திக்கே பிரார்த்திப்போம்

வேலணை மேற்கு விநாயகனருள் பெற்றுயர்
சீலமிகு குடும்பத்தோன்றல் சே.பொ. கேதாரநாதனவன்
ஏலவே எங்கும் புகழ் சேர் வை துரைச்சாமி கல்விச்
சாலையிலே மாணியாய், நல்லாசானாய்ப் பின் அதிபராய்
பணியாற்றி ஆறுபத்து அகவையிலே ஓய்வு கண்டு
தணியாத தமிழ் சைவப்பற்றுடனே தொண்டு பல செய்து
வளமார்ந்த மக்களுடன் துணையோடு நிறைவாக
கீழ்பால் இடந்திலங்கும் ஆஸ்திரேலியா தேசமதில்
வீழ்நாள் படாது நன்று ஆற்றிய தன்மையினால்
தாழ் சேர் சடையானடித்தலம் சென்றுற்றான்
அந்தோ! ஆண்டொன்று சென்றதே இந்நாள்
சாந்திக்கே பிரார்த்திப்போம் நாமே.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
**சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வித்தியாலயம், வேலணை.**
(50692)

# விலை குறைக்கப்பட்டுள்ளது

தீபாவளித் திருநாளை முன்னிட்டு
**20 10 97** முதல் **29 10 97** வரை
அரிய சந்தர்ப்பம்
சிறுவர்களுக்கான தைத்த
ஆடைகள், துணிவகைகள், ஆண்கள்,
பெண்களுக்கான தைத்த ஆடைகள்,
துணிவகைகள் மற்றும் குடைகள்,
சப்பாத்து வகைகள், சிறிய மின் விசிறிகள், என்பவற்றை
மொத்தவிற்பனை விலைக்கழிவுடன் (5%)
பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
நாடு முழுவதற்குமான புடைவை விநியோகத்தில்
முன்னணி ஸ்தாபனமான

**'லங்கா சலுசல லிமிட்டெட்'**

(சலுசல விற்பனை நிலையம்)
19,20, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.
(50683)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாண்சிங் தலைமையிலான கூட்டணி கவிழுகின்ற நிலையில்!

## உத்தரப் பிரதேசத்தில் பெரும் அரசியல் நெருக்கடி

புதுடில்லி, ஒக் 21

உத்தரப்பிரதேச மாநிலத்தில் கல்யாண்சிங் தலைமையிலான கூட்டணி அரசில் இருந்து பகுஜன் சமாஜக் கட்சி வெளியேறியதை அடுத்து கூட்டணி அரசு ஆட்டம் கண்டுள்ளது.

இன்று மாலைக்குள் கல்யாண்சிங் அரசு சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்புக்கோரி அதில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டும் என உத்தரப்பிரதேச மாநில ஆளுநர் றமேஸ் பண்டாரி அறிவித்துள்ளார்.

செல்வி மாயாவதி கல்யாண்சிங் இருவரது மனுக்களையும் பரிசீலித்த பின்பு அவர் இந்த முடிவை எடுத்தார்.

முன்னதாக முதல்வர் கல்யாண்சிங் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை பகுஜன் சமாஜக் கட்சி விலக்கிக் கொள்வதாக அதன் துணைத் தலைவரும் முன்னாள் முதல்வருமான செல்வி மாயாவதி அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து மாநில ஆளுநர் றமேஸ்பண்டாரியைச் சந்தித்த மாயாவதி, அரசுக்கு ஆதரவை விலக்குகின்ற கடிதத்தை அவரிடம் சமர்ப்பித்தார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான கொள்கைகளை அரசு கடைப்பிடிப்பதாகவும் பகுஜன்சமாஜக் கட்சியை பிளவுபடுத்த கல்யாண்சிங் முயல்வதாகவும் முன்பு வாக்களித்தபடி சட்டமன்ற சபாநாயகர் பதவியை தங்களுக்கு விட்டுத்தரவில்லை என்றும் மாயாவதி குற்றம் சாட்டி உள்ளார்.

சட்டப் பேரவையைக் கலைத்துவிட்டு உடனடித் தேர்தலுக்கு குடியரசுத் தலைவர் உத்தரவிட வேண்டும் என்றும்பகுஜன்சமாஜக் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் ஆளுநரைப்பின்பு சந்தித்த கல்யாண்சிங், சட்டப்பேரவையில் தன்னால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியும் அதற்கு ஒரு வாய்ப்புத் தரப்பட வேண்டும்என்று கேட்டுக்கொண்டார்.

அதற்கிணங்கவே இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

(இ-9)

## சிறைப்பிடிக்கப்பட்டவர்களை விடுவிக்க தலிபான் கோரிக்கை

காபூல், ஒக். 21

தலிபானுக்கு எதிரான கூட்டணிப் படையினர் பிடித்து வைத்துள்ள சுமார் 2 ஆயிரம் தலிபான் போராளிகளையும் சில முக்கிய தலிபான் தலைவர்களையும் விடுவித்தால் அவர்களுடன் சமாதானத்துக்கான பூர்வாங்க நடவடிக்கைகளை தொடங்கத் தயார் என தலிபான் குழு நேற்று முன்தினம் அதிகார பூர்வமாக அறிவித்தது.

சமீபத்தில் தலிபான் போராளிகள் ஆப்கானிஸ்தானின் வடக்குப் பகுதிவரை முன்னேறிச் சென்றிருந்தனர் எனினும் எதிர்க் கூட்டணிப் படையினரின் தாக்குதல் காரணமாக தலிபான் படை பின்வாங்க நேரிட்டது.

அப்பொழுது பிடிபட்ட சுமார் 2 ஆயிரம் தலிபான் போராளிகளே சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

சமாதானப் பேச்சுக்களுக்கு முன் நிபந்தனையாக இவர்களை விடுதலை செய்யுமாறு தலிபான் போராளிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். (இ-9)

ஹெலிகள், கப்பல்கள் சகிதம்

## சிங்கப்பூர் கடற்பரப்பில் துப்புரவுப் பணி தீவிரம்!

சிங்கப்பூர். ஒக் 21

சிங்கப்பூர் கடற்பரப்பில் இடம்பெற்ற சப்பல் விபத்துச் சம்பவம் ஒன்றை அடுத்து கடலில் கலந்து விட்ட சுமார் 25 ஆயிரம் தொன் மசகு எண்ணெயை கடலில் இருந்து அகற்றும் பணி முழு வீச்சில் இடம் பெற்று வருகிறது.

முப்பதுக்கு மேற்பட்ட சப்பல்களும், அவற்றுக்கு உதவியாக ஹெலிக்கொப்ரர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நீரின் மேல் திரளாகப் பரவியுள்ள எண்ணெய்ப் படலத்தை வாரி எடுப்பதற்கு வாரும் கருவிகள் பொருத்தப்பட்ட வள்ளங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தண்ணீரில் இருந்து எண்ணெயைப் பிரித்தெடுக்க வசதியாக இரசாயனப் பதார்த்தங்கள் விசிறப்படுகின்றன.

இந்த எண்ணெய்க் கசிவுக்கு காரணமான கப்பல் விபத்துச் சம்பவம் எவ்வாறு ஏற்பட்டது என்பதற்கான உண்மையான காரணங்கள் இன்னும் தெரியவரவில்லை.

தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட ''ஒரோபின் குளோபல்'' என்ற பெரிய கப்பல் விபத்து நடந்த போது வெற்றுக் கப்பலாகவே சென்று கொண்டிருந்தது. ஆனால் அதனுடன் மோதிய சைப்பிரஸ் கொடியுடன் வந்த ''இவெய்கொஸ்'' என்ற கப்பல் எண்ணெய் ஏற்றிக் கொண்டு வந்தது. (ஐ)

# சீன-அமெரிக்க வர்த்தகப் பேச்சில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமில்லை

லண்டன், ஒக். 21

சீனாவில் உற்பத்தியாகும் பொருள்களை கூடிய அளவில் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாக சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் இடம்பெற்று வரும் பேச்சுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மாத இறுதியில் சீனத் தலைவர் ஜியாங் செமின் அமெரிக்கா செல்லும்போது அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுடன் உச்சிப் பேச்சுக்களை நடத்துவார்.

சீனத் தலைவர் ஒருவர் கடைசியாக 12 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கா சென்றிருந்தார்.

சீனா ஒரு பொருளாதார அச்சுறுத்தல், மனித உரிமைகளை மீறும் நாடு மத்திய கிழக்கில் உள்ள ஸ்திரமற்ற அரசாங்கங்களுக்கு ஆபத்தான தொழில் நுட்பங்களை ஏற்றுமதி செய்யும் நாடு என அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது.

(இ-9)

### மண்டேலா லிபியா பயணம்

அமெரிக்காவின் கடுமையான ஆட்சேபனையையும் பொருட்படுத்தாமல் தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலா லிபியாவுக்கு அரச பயணம் மேற்கொண்டுள்ளார்.

''நாங்கள் எங்கு போக வேண்டும். யார் எங்களுக்கு நண்பர்களாக இருக்க வேண்டும்'' என்பதை அமெரிக்கா தீர்மானிக்க முடியாது என்று மண்டேலா தெரிவித்தார்.

(இ-9)

உலக அரங்கில்

வரவு-செலவுத் திட்டத்தில்

## பாதுகாப்புக்கான நிதி மேலும் அதிகரிப்பு

1998 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மிக அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1998 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு மதிப்பீட்டுச் சட்டம் கடந்த 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸால் முன்வைக்கப்பட்டது.

அடுத்த வருட வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் மொத்த செலவீனம் 21 ஆயிரத்து 50 கோடி ரூபா ஆகும். இதில் பாதுகாப்பு அமைச்சுக்கென 4 ஆயிரத்து 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது இந்த வருடம் ஒதுக்கப்பட்டிருந்த நிதியை விட அதிகம் ஆகும்.

இந்த வருடம் போர்ச் செலவுகளுக்கென 4 ஆயிரத்து 400 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பல தடவைகள் குறைநிரப்புப் பிரேரணைகள் மூலம் மேலதிகமாக நிதி ஒதுக்கப்பட்டது. அடுத்த வருடம் பாதுகாப்பு அமைச்சுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இராணுவத்துக்கென ஆயிரத்து 920 கோடி ரூபாவும் —

கடற்படையினருக்கென 290 கோடி ரூபாவும் —

விமானப்படையினருக்கென 330 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் கல்விக்கென ஆயிரத்து 420 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது, இந்த வருடம் ஆயிரத்து 220 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டு இருந்தது.

சுகாதார சேவைகளுக்கென இந்த வருடம் 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அடுத்த வருடம் இத்தொகை ஆயிரத்து 110 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வீதி மற்றும் பாலங்களைத் திருத்துதல், புதிதாக அமைத்தல் என்பவற்றுக்காக அடுத்த வருட நிதி ஒதுக்கீட்டில் 750 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ-5)

### அதிபர் கூட்டம் ஒத்திவைப்பு

நல்லூர்க்கோட்ட அதிபர்களுக்காக நாளை ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும் என்று நல்லூர் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் வ.தானையா தெரிவித்துள்ளார். (இ-3)

### கருத்தரங்கு

யாழ். கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் நெடுந்தீவு கல்விக் கோட்ட வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகளும், ஆசிரியர்களுக்கான உடற்கல்விக் கருத்தரங்கும் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் 17, 19 வயது பிரிவுகளுக்கான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகளும்—

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் உடற்கல்விக் கருத்தரங்கும் - நடைபெறும்.

# சிதம்பரபுரம் முகாம் அகதிகள் போதிய உதவி இன்றித் தவிப்பு

## ஆயுதம் தாங்கிய குழுவினரால் அச்ச நிலை

வவுனியா, ஒக்.21

வவுனியா சிதம்பரபுரம் அகதி முகாமில் இருந்த அகதிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த உதவிகள் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள அகதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முகாமில் சுமார் 5 ஆயிரம் அகதிகள் உள்ளனர். இவர்களை முகாமை விட்டு வெளியேறச் செல்லுமாறு அதிகாரிகள் நிர்ப்பந்திப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் ஆயுதம் தாங்கிய சிலரால் முகாமில் இருந்த 7 பேர் விசாரணைக் கென அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும்—

இவர்களில் இருவர் மாத்திரமே பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இம் முகாமிலுள்ள அகதிகளுக்கு உதவிகள் வழங்கி வந்த போதிலும் தற்போது இந்த உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

(இ-5)

உ

சித்தன்கேணி

ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான

மஹா கும்பாபிஷேகம் (22-10-97 புதன்)

இன்று (21-10-97) செவ்வாய் ஐப்பசி 4 ஆம் நாள் காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல், காலை 8 மணிமுதல் யாகபூஜை வழிபாடு காலம் IV, விஷேட திரவிய ஹோமம், மாலை யாகபூஜை வழிபாடு காலம் V, தத்துவபூஜை.

கிடைத்தற்கரிய சிவகைங்கரியத்தில் அனைவரும் பங்குபற்றி சிவனின் திருவருளுக்குப் பாத்திரமாகுமாறு வேண்டி நிற்கும்

சிவனடியார்கள்.

விளம்பர அன்பளிப்பு:-

சுப்ரா கல்வி நிலையம், சித்தன்கேணி.

ராகம்ஸ் ஸ்ருடியோ ராகம்ஸ்மினி சினிமா வடலியடைப்பு

ஜெசிபா ஏஜென்சி, 132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வீ. எஸ். பி. குறூப், 275-277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(5056T)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**உடன் விற்பனைக்கு**

பிறிமா பிறவுண், வெள்ளை 8 நாள் பேட்டுக் குஞ்சுகள் உடன்விற்பனைக்குண்டு. மற்றும் புறோயிலர் குஞ்சுகளும், உடன் தொடர்பு: மல்லிகா பதி, சந்தை கிழக்குஒழுங்கை, மானிப்பாய். [50664]

**சேவை**

எமது புத்தக இரவல் கொடுக்கும் சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளோம் என்பதை எமது வாசகப்பிரியர்களுக்கு அறியத்தருகின்றோம். ஞானம் புத்தக நிலையம், 635, கே. கே. எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (50635)

## தொலைக்காட்சி பெட்டியும் ஜெனரேட்டரும்

நெடுந்தீவு கிழக்கு, மத்தி மற்றும் மேற்கு ஐக்கிய தீப சனசமூக நிலையங்களுக்கு தொலைக் காட்சிப் பெட்டியும் ஜெனரேட்டரும் வழங்கப்படவுள்ளன.

இதற்கென யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதியில் இருந்து மூன்று லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். (இ-111)

## ஆண்டு மலர் வெளியீடு

வவுனியா, ஒக். 21

யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாகத்தின்கணக்கியலும், நிதியியலும் மாணவர் ஒன்றியத்தின் ஆண்டு சஞ்சிகையின் இரண்டாவது மலர் வெளியீட்டு விழா நாளைபுதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா காமினி மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் ஒன்றியத் தலைவர் சுப்ரம் சுரேஸ் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளர் எஸ். புலேந்திரன்ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ)


## விற்பனையாகிறது

வரலாறும் சமூகக் கல்வியும் ஆண்டு 6—11 வரையான தவணைப் பரீட்சைகளுக்கும், ஆண்டிறுதிப் பரீட்சைகளுக்கும் ஏற்ப புதிய அணுகு முறையில் அமைந்த வெளியீடுகள்

ஆக்கம்: நா. மயில்வாகனம்
(முன்னாள் பிரபல ஆசிரியர்
யாழ். பரி. யோவான் கல்லூரி)

சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
235, K. K. S. வீதி, யாழ்ப்பாணம், (50674)


## விண்ணகப் பிறப்பின் 6 ஆம் திங்கள்
# நினைவஞ்சலி



## அமரர் கதிரவேலு நடராசா

பிறப்பு: 15 — 01 — 1933
இறப்பு: 25 — 04 — 1997

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
குன்றாத மணி விளக்காய்
குதூகலத்துடன் வாழ்ந்த உன்னை
கூற்றுவன் வந்து,
குறுக்கே எடுத்து விட்டான்
ஆலவிருட்சமாய் நீ இருக்க
அந்நிழலில் நாம் ஆறி நின்றோம்
ஆறு திங்கள் போனாலும்
ஆறாதையா உன் நினைவு!
ஆற்றுவார் யாருமில்லை
ஆதரிப்பார் எவருமில்லை
இடையிலே விட்டுச் சென்றீர்
எப்படி நாம் வாழ்வது?

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

பலகாடு,
காரைநகர்.

(50670)

## பத்தாம் ஆண்டு
# நினைவலைகள்



மலர்வு: 20 — 03 — 1952
உதிர்வு: 21 — 10 — 1987

## அமரர் அ. அ. விக்ரர்

(சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்)

அன்பனே!
சேவைக்காய் உனையே மெழுகாக்கி நின்றவனே!
இடர் காணும் மக்களின் துயர்துடைத்துக்
கொண்டவனே!
குற்றுயிராய் கூவி அழுதோர் குரல் தேடி வந்தவனே!
தெரு வீதியில் உனையிழக்க நேர்ந்ததுவே!
உன் அன்பான முகமிழந்தோம்;
நீதி கேட்க வழியிழந்தோம்
உறவினால் இணைந்து நின்றோம்;
பிரிவினால் துன்புறுகின்றோம்!
பாசம் வைத்த நெஞ்சங்கள் பரிதவிக்கின்றோம்!
மறக்க முடியுமா உன் நினைவலைகளை?

மனைவி, பிள்ளைகள்.

4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(50667)

## பத்தாவது ஆண்டு
# நினைவஞ்சலி

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21, 22 ஆம் திகதிகளில இந்திய இராணுவ நடவடிக்கையால் யாழ். பொது வைத்திய சாலையில் கடமையின் போது உயிர்நீத்த கீழ்வரும் உத்தியோகத்தர்கள் / ஊழியர்களுக்கு

**எமது கண்ணீர் அஞ்சலிகள்!**

1. வைத்திய நிபுணர் எஸ். சிவபாதசுந்தரம்
2. வைத்திய கலாநிதி கே. பரிமேலழகர்
3. வைத்திய கலாநிதி கே. கணேசரத்தினம்
4. திருமதி [illegible]ர. வடிவேலு
5. செல்வி லீலாவதி முத்தையா
6. செல்வி மங்கையர்க்கரசி இராமநாதன்
7. திரு. கே. செல்வராசா
8. திரு. கே. கிருஷ்ணராசா
9. திரு. மு. துரைராஜா
10. திரு. மி. சண்முகலிங்கம்
11. திரு. வி. வரதராசன்
12. திரு. கே. வேதாரண்யம்
13. திரு. ஜோன் பீற்றர்
14. திரு. இ. சுகுமார்
15. திரு. க. சிவலோகநாதன்
16. திரு. எஸ். ஜெகநாதன்
17. திரு. கே. சிவராசா
18. திரு. கோ. உருத்திரன்
19. திரு. க. மார்க்கண்டு
20. திரு. இ. இரத்தினராசா
21. திரு. க. நவரத்தினம்

**பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.**

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி/ 1784)

''நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்''

(20 சங்; 7ஆம் வச.)

## அடைக்கல கூடார சபை,
## துணவி.

# முதலாம் வருட கூடாரப் பண்டிகை விழா

இடம்: துணவி
காலம்: 21 - 10 - 1997 செவ்வாய்க்கிழமை
நேரம்: பிற்பகல் 2.00 மணி

நன்றிதுதி ஆராதனையும், ஆறுதலளிக்கும் தேவசெய்தியும், சபைச் சிறுவர்களினதும், வாலிபர்களினதும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

★ அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம் ★

''கர்த்தரைத் துதித்து அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள், அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள்''

(சங். 105:1)

சபை போதகர், ஊழியர்கள், விசுவாசிகள்.

(50591)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது லட்சம் ரூபா பெறுமதியான உபகரணம் யாழ். ஆஸ்பத்திரிக்கு

யாழ்ப்பாணம், ஒக். 21

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் 20 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு வழங்கப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

100 கட்டில்கள், அதற்கான மெத்தைகள், 100 சிறிய அலுமாரிகள், வைத்தியர் நூல்நிலையத்துக்கு கம்பியூட்டர், தொலைக்காட்சிப்பெட்டி, மருத்துவ புத்தகங்கள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம், நோயாளர்கள் பார்வையிட தொலைக்காட்சிப் பெட்டி ஆகியன வழங்கப்படவிருக்கின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் சுகாதார சேவை அபிவிருத்தி குறித்து ஆராய்ந்து பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

★ யாழ். மாவட்டத்தில் இருந்து கொழும்புக்கு நேர்முகப் பரீட்சைக்குச் செல்வதில் மக்கள் பெரிதும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். ஆகவே யாழ்ப்பாணத்தில் சகல நேர்முகப்பரீட்சைகளையும் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

★ யாழ். ஆஸ்பத்திரியில் நிறுத்தப்பட்ட கட்டட வேலைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ யாழ். ஆஸ்பத்திரிக்கு ஜேர்மன் அரசு வழங்கிய எக்ஸ்ரே கருவிகளை விரைவாக இயக்க நடவடிக்கை எடுத்தல்.

★ யாழ். மாவட்டத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு தமிழ் தெரிந்த டாக்டர்களை நியமித்தல். (இ-3)

# இடைநிலை மருத்துவ சேவை நேர்முகப் பரீட்சை நாளை

## யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக். 21

சுகாதாரத் திணைக்களத்தின் இடைநிலை மருத்துவ சேவைக்கு (பராமெடிக்கல்ஸ்) ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை நாளை புதன் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெறும்.

கொழும்பில் நடைபெற்ற மேற்படி நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்காதவர்களே நாளை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சம்பந்தப் பட்டவர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் நேர்முகப் பரீட்சை நடைபெறுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குப் பின்னரேயே கிடைத்தமையாலும்—

கொழும்பு செல்வதில் ஏற்பட்ட போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகவும்— நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பலர் கொழும்பு செல்ல முடியவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் இதுபற்றி சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வாவுடன் பேச்சுக்கள் நடத்தியதைத் தொடர்ந்து மேற்படி நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது. (இ-5)

# கட்டாக்காலி நாய்களை அழிக்க 'காஸ்' பயன்படுத்த கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள கட்டாக்காலி நாய்களை ''காஸ் மூலம் அழிக்கும் வாகனம்' ஒன்றை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் வைத்து யாழ். மாவட்ட மாகாண சுகாதாரப்பணிப்பாளர் டாக்டர் தா. சிவபாதம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளது. இவற்றை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஏனைய மாவட்டங்களில் நடைமுறையில் உள்ள காஸ் மூலம் நாய்களை அழிக்கும் திட்டத்தை இங்கும் நடைமுறைப்படுத்த அதற்கான வாகனத்தை தந்துதவ வேண்டும் - என்றும் இவர் கேட்டுள்ளார். (இ-3)

# பெரியவிளானில் மீளக்குடியமர்வு

நல்லூர், ஒக். 21

பண்டத்தரிப்பு பெரிய விளான் கிராம அலுவலர் பிரிவில் 65 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இப்பகுதியில் மீளக்குடியமர்வுக்கென தொடர்ந்தும் மக்கள் வந்து கொண்டிருப்பதால் இங்குள்ள மக்களின் வசதி கருதி பண்டத்தரிப்பு பல. நோ. கூ. சங்கம் சேதமுற்ற தனது கிளையைத் திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (இ-103)

# அடையாள அட்டை மோசடி; கண்டுபிடிக்கப் பயிற்சி!

கொழும்பு, ஒக். 21

அடையாள அட்டைகளில் இடம்பெறும் மோசடிகளை கண்டுபிடிக்கும் முறை குறித்த பயிற்சி பொலீஸாருக்கும், இராணுவத்தினருக்கும் தற்சமயம் வழங்கப்பட்டு வருகிறது.

கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்தே இந்தப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

பொது இடங்களில் பணியில் ஈடுபடும் சகல இராணுவத்தினரும் பொலீஸாரும் போலி அடையாள அட்டைகளைக் கண்டு பிடிக்க வசதியாகவே இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது. (இ-3)

# அனர்த்தங்களுக்குப் பின்னரும் தலை நிமிர்ந்து நிற்கும்வல்வை ஆஸ்பத்திரியின் இன்றைய நிலை

நெல்லியடிச் செய்தியாளர்
**இ. கிருபாகரசூரியன்**

வடமராட்சிப் பகுதியில் மிக முக்கிய மருத்துவ சேவை நிலையங்களாக மந்திகை மருத்துவமனையும், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலையும் விளங்கி வருகின்றன.

பருத்தித்துறையிலிருந்து கடற்கரை வீதியூடாகச் செல்லும் பாதையில் ஊறணி என்னும் இடத்தில் இந்திராணி வைத்தியசாலை எனப் புகழ் பூத்த அரச மருத்துவ மனையே வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையாகும்.

கடந்த சுமார் 15 வருடங்களுக்கு முன்னர், மக்களைப் பாதிக்கும் பலதரப்பட்ட வியாதிகளையும் குணமடையச் செய்யும் நிலையில் இயங்கிவந்த இந்த மருத்துவ மனை கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் சுகாதாரத் திணைக்களத்தால் மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற போர் அனர்த்தங்களின் போது, இவ்வைத்திய சாலை பல்வேறு வகையான தாக்குதல்களுக்கு இலக்காகியது. ஆனால் வைத்திய சாலையை இழுத்து மூடாமல் இறுதி நேரம் வரை பணியாற்ற வைத்தவர் அக்காலப் பகுதியில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் அப்பாத்துரை அவர்களாவர்.

ஷெல் வீச்சுக்கள், குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்ற வேளைகளிலும் வல்வெட்டித்துறைப் பகுதியில் தலை நிமிர்ந்து நின்று, அல்லலுற்ற நோயாளர்களுக்கு அபயக் கரம் நீட்டியது இந்த வல்வை வைத்தியசாலை ஆகும்.

இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியதையடுத்து, பாதுகாப்பின் நிமித்தம் இவ் வைத்தியசாலையை இழுத்து மூடும் நிலை உருவானது. இங்கு பணிபுரிந்த வைத்தியர்கள் சுகாதாரத் தொழிலாளிகள் உட்பட சகல ஊழியர்களும் இடமாற்றம் பெற்றும் ஓய்வு பெற்றும் சென்றனர்.

அண்மைக் காலமாக ஓரளவு சுமுக நிலை ஏற்பட்டதையடுத்து மீண்டும் இவ் வைத்தியசாலை பல குறைபாடுகளின் மத்தியிலும், நோயாளிகளுக்குக் கை கொடுத்து உதவுகின்றது. இதற்குக் காரணமாகவிளங்குபவர் அண்மையில் புதிதாக இங்கு பதவியேற்ற மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயிலேறும் பெருமாள் எனலாம்.

### நோயாளர் அதிகரிப்பு

இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி இடம் பெயர்ந்த மக்களில் கணிசமானோர் தமது இருப்பிடங்களுக்கு வந்து சேர்ந்திருப்பது மட்டுமல்லாமல், தம்முடன் பலதரப்பட்ட தொற்று நோய்களையும் சுமந்து வந்துள்ளனர். இதனால் இவ் வைத்தியசாலைக்கு தினமும் வரும் நூற்றுக் கணக்கான நோயாளர்களில் 25 பேர்களையாவது வார்ட்டில் அனுமதித்து சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. அதனால் ஆண், பெண் வார்ட் பகுதிகள் நிரம்பிவழிகின்றன. தற்பொழுது எஞ்சியிருக்கும் முறிந்த கால்களையுடைய கட்டில்களே அவர்களுக்குத் தஞ்சமாகிவிட்டன. இக்கட்டில்களில் படுக்கும் நோயாளிகள், சில வேளைகளில் கட்டில் முறிந்து கீழே விழும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

கடந்த 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில், வலிகாமம் மக்கள் வடமராட்சிக்கும், தென்மராட்சிக்கும் இடம் பெயர்ந்த வேளை நோயாளிகளை படுக்க வைப்பதற்கென இங்கிருந்த கட்டில்களில் 20 கட்டில்களை யாழ். சுகாதாரத் திணைக்களம், மந்திகை மருத்துவமனைக்கு தானமாக வழங்கியது. ஆனால் இரண்டு வருடங்கள் கழிந்த பின்னரும் அந்த 20 கட்டில்களையும் திருப்பி ஒப்படைக்க சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை.

### கர்ப்பிணிகள் அதிகம்

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தை அண்டிய தொண்டமானாறு, கெருடாவில், உடுப்பிட்டி, வல்வெட்டி, கம்பர்மலை, கொற்றாவத்தை, திக்கம், பொலிகண்டி ஆகிய பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான கர்ப்பிணிப் பெண்கள் இங்கு சிகிச்சை பெறுகின்றனர். ஆனால் இங்குள்ள மகப்பேற்று நிலையத்தில் பிரசவங்களை நடத்த முடியாத நிலை உள்ளது அதற்குமுக்கியகாரணம், சத்திர சிகிச்சை நிபுணர் இல்லாததே ஆகும். இக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில்

## செய்தி மடல்

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் மேற்பார்வையில் முதல் பிரசவங்கள் மட்டும் இங்கு தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

### நாற்காலிகள் அன்பளிப்பு

தினமும் சுமார் 700 நோயாளிகள் காலையும் மாலையும் வருகை தரும் இந்த வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவில் அவர்கள் தங்கியிருக்க வாங்குகள் இல்லை. இதனை அவதானித்த ஊறணியைச் சேர்ந்த இ. தேவகுரு என்பவர் சில நாற்காலிகளை வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்த வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்ட வேளை வைத்தியசாலையின் நிர்வாக அலுவலக கட்டடமும் வெளி நோயாளர் பிரிவுக் கட்டடமும் மட்டுமே சுகாதாரத் திணைக்களத்தால்நிர்மாணிக்கப்பட்டன. அதன்பின் இவ் வைத்தியசாலையின் பல்வேறு பிரிவுகளுக்குமான கட்டடங்களை இவ்வூர் நலன்விரும்பிகளும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினருமே கட்டிமுடித்துள்ளனர்.

### ஊழியர் பற்றாக்குறை

இந்த வைத்தியசாலையில் பணிபுரிந்த பல தரப்பட்ட ஊழியர்களும் ஓய்வுபெற்றும் இடமாற்றலாகியும் சென்றுள்ளதனால் இங்கு வார்ட்டில் தங்கிச்சிகிச்சை பெறும் நோயாளிகளைப் பராமரிக்க போதியளவு தொழிலாளர்கள் இல்லை. இதனால் நோயாளிகள் பாதிக்கப்படுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அக்கறையற்ற செயற்பாட்டினால் இவ் வைத்தியசாலையை இழுத்து மூடும் நிலை உருவாகிய போதும், அங்கு பணிபுரிந்து வரும் மாவட்ட வைத்திய அதிகாரி, ஊழியர்கள் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இங்கு தொண்டர்களாகத் தம்மை அர்ப்பணித்துப் பணிபுரியும் மூன்று இளம் யுவதிகளுக்கு, தனது வேதனத்திலிருந்தும், ஊழியர்கள் வேதனத்திலிருந்தும் நிதி சேர்த்து தலா 2 ஆயிரம் ரூபாவீதம்மாதாந்தம் வழங்கி வருகின்றார்.

இதே வேளை இங்கு அம்புலன்ஸ் சாரதிகளாகக் கடமையாற்றிய இரு சாரதிகளும், அச்சுவேலி, மந்திகை மருத்துவமனைகளுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

### பல பதவிகள் வெற்றிடம்

இங்கு நிரந்தரமாக, விடுதி எழுதுநர் நியமிக்கப்படவில்லை, பல வருடகாலமாக அப்பதவி வெற்றிடமாக இருக்கின்றது. இங்குள்ள எழுதுவினைஞரே அதனையும் கவனிக்கின்றார். எதிர்பாராதவிதமாக அவர் லீவு எடுத்தால். வார்ட்டிலுள்ள நோயாளிகளுக்கு உணவு வழங்க முடியாத நிலை ஏற்படும்.

### தாதிகளுக்கு விடுதி இல்லை

இங்கு பணிபுரியும் தாதிகள் தங்குவதற்கு விடுதிகள் எதுவுமில்லை. இதனால்தூர இடங்களிலிருந்து வரும் தாதிகள் நேரத்துக்குச் சமுகமளிக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

ஷெல் வீச்சுக் காரணமாக உருக்குலைந்திருக்கும் மாவட்ட வைத்திய அதிகாரியின் விடுதி, இதுவரை திருத்தப்படவில்லை. இதனால் மாவட்ட வைத்திய அதிகாரி தினமும் 10 மைல் தூரத்திலிருந்து சைக்கிள் மூலமாகக் கடமைக்குவருகின்றார்.

ஆண், பெண், வார்ட் பகுதிகளில் கூரைகள் பெரும் சேதமடைந்துள்ளன. அங்குள்ள ஜன்னல்களில் நிலைகள் உள்ளன. கண்ணாடிகள் இல்லை. கட்டிலில் படுத்திருக்கும் நோயாளி வானம் பார்க்கும் நிலையும் இங்கு உள்ளது. இதனால் மழை காலத்தில் வார்ட்டில் தங்கியுள்ள நோயாளிகள் குளிரில் நடுங்குகின்றனர்.

சமையற் கூடத்தில் நோயாளிகளுக்கும், ஊழியர்களுக்கும் தரமான உணவைத் தயாரிக்க அனுபவம் மிக்க சமையலாளர்கள் இருந்தும் சமையலறையின் கூரை சேதமடைந்துள்ளமையால் ஓடுகளுக்குப் பதிலாக ஐந்து பாய்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அம்புலன்ஸ் இல்லை

இந்த வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி வழங்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக தனியார் வாகனத்தை வாடகைக்குப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாலை வேளை அவசர நோயாளி ஒருவரை யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது தனியார் வாகன சாரதி தயக்கமடைகிறார். இதனால் நோயாளிகள் உயிராபத்தை எதிர் நோக்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக
சமூக, விஞ்ஞான மன்றத்தின்

## சமூக ஒளி - இதழ் -06

சஞ்சிகை வெளியீட்டு விழா
**1997**

இடம்: கைலாசபதி கலையரங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

காலம்: **22-10-1997 புதன்கிழமை**
பிற்பகல் 2 – 30 மணி

ஆர்வலர் அனைவரையும் இவ்வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்-

நன்றி.

சமூக விஞ்ஞான மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(50675)

## ஏல விற்பனை

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் சகல அளவுகளிலும் பாதணிப் பொருட்களை 25 - 10 - 1997 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சமாசப்பணிமனையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட இருக்கின்றன. ஆகக் கூடிய விலை கோருபவர் உடன் பணம் செலுத்திப் பொருள்களை எடுத்துச் செல்லலாம். பொருள்களைப் பார்வையிட விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பார்வையிடலாம்.

பதில் மாவட்ட செயலாளர்,
**சி. க. கூ. ச. சமாசம்,**
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட சி. க. கூ, ச. சமாசம
இல. 291, ஸ்ரான்லி வீதி,
யாழ். ப. நோ. கூ. ச. மேல் மாடி,
யாழ்ப்பாணம்.

(50676)

## முதலாண்டு நினைவஞ்சலி

என்றும் எம் நெஞ்சைவிட்டு அகலாத இதயக்கனி
**அமரர் மாணிக்கம் வல்லிபுரம்**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய-
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெறாமகள் தங்கா

[50506]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணின் மடியில்: 15 — 05 — 1987
ஆண்டவன் அடியில்: 12 — 11 — 1995

### செல்வி யகிதா சுப்பிரமணியம்

[ 3 ஆம் ஆண்டு மாணவி, யா/பொலிகண்டி இ. த. க. பாடசாலை ]

**திதி: 21 - 10 - 1997**

பாசம் மிகு அருமை மகளே!
பார் புகழ வாழப் பிறந்த எம் கண்ணே!
அருமை பெருமையாய் வளர்த்த
அரும் பெரும் தனிச் செல்வமே!
ஆரா அன்புடனே அம்மையப்பன் நடுவினிலே
உறங்கிய வேளையிலே போதாத காலம் போலும்
காலனவன் ''ஷெல்'' வடிவில்
கவர்ந்து விட்டான் உன் இன்னுயிரை
ஆனதே ஆண்டுகள் இரண்டு
ஆறுமா எம் உள்ளம்?
வேகுதே வேதனையாய் வெந்தழல் போல்
ஆண்டுகள் எத்தனைதான் போனாலும்
ஆறுமோ எம் துயர்?
உன் பிறவிக்கடல் நீந்தி விட்டாய்
நாம் தினமும் கண்ணீர்க் கடலில் மிதக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
உறவினர்கள்.

ஒதியடி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

[50604]

## அனர்த்தங்களுக்கு ...

(ஐந்தாம் பக்கத் தொடர்)

கள் கட்டப்பட்டுள்ளன. மழை காலத்தில் பாய்களின் மேல் தேங்கி நிற்கும் மழை நீர் சமைக்கும் உணவுப் பாத்திரங்களில் விழும் நிலையும் ஏற்பட்டிருப்பதுடன் சமையற் கூடத்தில் 2 அடி உயரமான வெள்ளம் நிரம்பி நிற்கும் போது வாங்குகளை நிலத்தில் வைத்து அதன் மீது ஏறி நின்றே சமையலையும், உணவுப் பங்கீட்டையும் மேற் கொள்கின்றார்கள்.

மலகூடங்களும் சேதம்

இந்த வைத்தியசாலையின் நாற்புறமும் சுமார் ஏழு நீரடைப்பு மலசல கூடங்கள் உள்ளன. மேல் மூடி சிமெந்தினால் கட்டப்பட்டு சேதமடைந்தமையால் அதற்குப் பதிலாக உருக்குலைந்த தகரங்கள் போடப்பட்டுள்ளன. இதன் துவாரங்களினூடாக இலையான்கள், நுளம்புகள் உட் சென்று வெளியேறுகின்றன.

இந்தக் குழிகளுக்கு மேல் தட்டுப் போடுவதற்கு சுகாதாரத் திணைக்களத்திற்கு சிமெந்து கோரி கடிதம் அனுப்பியும் இதுவரை பதிலும் இல்லை. சிமெந்தும் வரவில்லை.

இந்த மருத்துவமனையில் தகுதி வாய்ந்த அனுபவம் மிக்க அதிகாரி கடமையிலிருந்தும் பிரேத அறை சீர்கேடாக இருப்பதனால் பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது. அத்துடன் பிரேத பரிசோதனைக்குரிய உபகரணங்களும் இல்லை. இதனால் பரிசோதனை செய்யப்படும் சடலங்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் மந்திகை பிரேத அறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இரும்புக் கட்டில்கள் முறிந்த நிலையில் உள்ளதால் வார்ட்டில் தங்கியிருக்கும் நோயாளிகளின் நலன் கருதி மாவட்ட வைத்திய அதிகாரி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, யூ. என். எச். சீ. ஆர் ஆகியனவற்றிடமிருந்து பாய்களும் தலையணைகளும் பெற முயற்சி மேற்கொண்டு வருகின்றார்.

தண்ணீர் தேவை

இந்த வைத்தியசாலையில் நோயாளிகள் அதிகரித்து வருவதனால், தினமும் 500 லீற்றர் குடி தண்ணீர் தேவைப்படுகின்றது. ஆனால் சுகாதாரத் திணைக்களம் 75 லீற்றர் குடிதண்ணீரையே வெளியிலிருந்து பணத்திற்குப் பெற அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வைத்தியசாலையில் நுண்கருவியியலாளர் பதவிக்கு பல வருட காலமாக எவரும் நியமிக்கப்படவில்லை. காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் இங்கு வரும் நோயாளிகளின் இரத்தம், பருத்தித்துறை மத்திய மருந்தகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அது பற்றிய அறிக்கை வந்துசேர ஒரு வார காலமாகும். அக்கால இடைவெளியில் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நோயாளி பரிசோதனை முடிவுகிடைக்க முன்னர் மரணமடையும் நிலையும் உருவாகின்றது.

பற் சிகிச்சை

ஒவ்வொரு வாரமும் செவ்வாய், புதன், வெள்ளி, சனி ஆகிய நான்கு நாள்களிலும், இங்குள்ள பற்சிகிச்சை நிபுணரினால் சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது. மின்சாரம் இன்மையால் அதன் உதவியுடன் மேற்கொள்ளப்படும் பல பற்சிகிச்சைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

வல்வெட்டித்துறை சந்தி வரை சேவையிலீடுபடும் பஸ்களை இவ் வைத்தியசாலைப் பகுதி ஊடாக சேவையில் ஈடுபடுத்தினால் பலவித நோயாளிகளும் [illegible] வைத்தியசாலைக்கு வர வாய்ப்பு ஏற்படும்— என சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

★

## கண்ணீர் அஞ்சலி

### கனகசபை நடேசன்

[ சிவகணேசன் புடைவை மாளிகை ]


எனது தொழில் வளர்ச்சி மேம்படுவதற்கு உரமூட்டியவர்களில் ஒருவரான, அன்னாரது பிரிவினால் வேதனையுறும் நாம் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவினால்துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்குஎம் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வ. இராசதுரையும் குடும்பத்தினரும்.

சீசன்ஸ்,
நவீன சந்தை,
சாவகச்சேரி.

[சி/1825].

## முதலாம் ஆண்டு நினைவு



மலர்வு: 01 — 10 — 1948
மறைவு: 22 — 10 — 1996

### திருமதி பே. றெஜீனா

நெஞ்சம் கலங்குதம்மா
உம்மை நினைக்கையிலே – உம்
பிஞ்சு மழலையும் எண்ணி உருகுதம்மா
நொந்த மனத்துடனே
என்றும் நினைத்திருப்போம்
உம்மை அணைத்தருள – என்றும்
இறைவனை இறைஞ்சுகின்றோம்.


அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக **22-10-97** புதன்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்.

70, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

[50684]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 17 — 04 — 1923
ஆண்டவன் அடியில்: 25 — 10 — 1994

### அமரர் R. D. மயில்வாகனம்

(பொடித்தம்பி)
(Retired Valuation Inspector)

**திதி: 21 — 10 — 1997**

மூவாண்டுபோனாலும் உங்கள் அன்பு முகம்
மறக்கவில்லை
அழுதுபுரண்டாலும் கவலையும் தீரவில்லை!
அன்பினைப் பொழிந்து எம்மை ஆளாக்கிய அப்பா!
நித்தம் உங்கள் நினைவுகள் தினமும் எம்முன்
ஆடுதப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி: ம. நாகேஸ்வரி
பிள்ளைகள்: குகதாசன், வசந்தா, சண்முகதாசன், சாரதா, யோகதாசன், கிருஸ்ணதாசன்
மருமக்கள்: சத்தியதேவி, தெய்வேந்திரன், ஜெயக்குமார், சிவரூபி, கிரிசாந்தி
பேரப்பிள்ளைகள்: சுதர்சன், கலக்ஷன், பிரியதர்சினி, நிரோஷன், Radish, விமலினி, விசாலினி, பிரசாந்தன், செந்தூரன், சிவாந்தி மற்றும் சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

ம. குகன்,
''கயிலை'', வரணி.

(50679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முக்கியமான வாரம் இது

அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ள அட்டவணைப்படி தடங்கலின்றி ஒத்திப் போடுதல் இன்றி அலுவல்கள் நடக்குமாயின் இந்த வாரம் முக்கியமான, சுறுசுறுப்பான, கிழமையாக அமையும். இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கிய பதிவுகள் வரையப்படும்.

அரசு வகுத்துள்ள அட்டவணைப் பிரகாரம் அதிகாரப் பரவல் திட்டம் உள்ளடங்கிய அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இன்று ஆராயப்பட்டு இறுதி வடிவம் பெறும்.

அந்த இறுதி வடிவத்தை — சட்ட வரைவை — எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது அரசியல் அபிலாசைகளில் வடக்கு-கிழக்கு பிரிக்கப்படாத தாயகமும், அந்தத் தாயகத்தில் சுயாட்சி — தன்னாட்சி — அரசும் மிக முக்கியமானவை.

அவர்கள் கோரி நிற்கும் தனி நாட்டுக்கு மாற்றீடாக ஆகக் குறைந்தது தாயகத்தில் சுயாட்சி உரிமை என்ற தீர்வு இல்லையேல் எந்த முயற்சியாலும் அவர்களுக்குப் பயனிருக்காது.

அந்த நிலைப்பாட்டில் தமிழர்கள் விட்டுக் கொடுப்பதற்கு எதுவுமில்லை; விட்டுக் கொடுக்கவும் முடியாது; விட்டுக்கொடுக்கவும் கூடாது.

இது விடயத்தில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகள் மிகவும் உறுதியாகவும் வைராக்கியத்துடனும் செயற்பட வேண்டும்.

இந்த நிலைப்பாட்டிலிருந்து பிறழ்ந்து போனால், தந்தை செல்வநாயகம் காலம் தொடக்கம் நடத்தப்பட்டு வரும் உரிமை போராட்டம் அர்த்தமற்றதாகி விடும்; வீணாகிப் போய்விடும்.

உரிமைப் போராட்டத்தின் பால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும், அனுபவித்த அவலங்களும் கொஞ்சநஞ்சமா? அதன் பொருட்டு செய்யப்பட்ட அர்ப்பணிப்புக்களும், தியாகங்களும் வீண் போக விடலாமா?

இத்தனைக்குப் பின்னர் தாயகமும் சுயாட்சியும் இல்லாத தீர்வுக்குக் கையேந்தி நிற்க முடியுமா? இணைந்திருக்கும் வடக்கு — கிழக்கைப் பிரிக்கும் நோக்குடன் பரீட்சை நடத்த அனுமதிக்கலாமா?

தமிழர்களுக்குப் பலமான உறுதியான அரசியல் தலைமைத்துவம் இல்லை என்றும், அதனால் அரை வேக்காட்டுத் தீர்வு ஒன்று அவர்கள் மீது சுமத்தப்படுவதற்கான சாத்தியம் உண்டு என்றும் அரசியல் ஆய்வாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

அந்த அச்சம் ஆபத்தாக மாறாமல் தடுப்பது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளின் கைகளிலேயே உள்ளது. இது விடயத்தில் எல்லோரும்ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். ஒரே குரலில் ஒலிக்க வேண்டும்.

உரிமைகளைப் பெறுவதில் தமிழ்த் தலைவர்கள் முந்திய காலங்களில் ஏமாந்து போன, தோல்வி கண்ட வரலாறுகள் ஒரு படிப்பினையாக அமையட்டும். தனிப்பட்ட, கட்சி நலன்களை ஒதுக்கி விட்டு, நொந்து போயுள்ள தமிழர் நலனை முன்வைத்துச் செயற்பட வேண்டிய வாரம் இது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னர் தீர்வுப் பொதியை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துவிடவேண்டும் என்று அரசு அவசரப்படலாம். ஆனால் தமிழர்கள் அவசரப்பட்டுத் தமக்குரிய உரிமைகளை விலை பேசத் தயாராகக் கூடாது.

### காணாமற்போனோர் விசாரணை

# 170 பேருக்கு அழைப்பு;

# 12 பேரே சமுகமளித்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 21

குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சு விசாரணைக்குழு விசாரணைக்கு அழைக்கப்பட்டோரில் போதியளவு ஆள்கள் சமுகமளிக்காத காரணத்தால் விசாரணையை இரு நாள்களுடன் முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பியது.

பலாலியில் கடந்த 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் குழுவின் விசாரணைகளுக்கு 170 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் இவர்களில் 12 பேர் மட்டுமே விசாரணைக்கு சமுகமளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைவிட புதிதாக முறைப்பாடு செய்த 20 பேரும் விசாரணைக்கு சமுகமளித்தனர்.

முதல்நாள் 30 பேரும், 2 ஆவது நாள் இருவரும் சாட்சியம் அளித்தனர்.

மூன்றாம் நாள் விசாரணைக்கு எவரும் சமுகமளிக்காததால் விசாரணைக்குழு அன்றே கொழும்பு திரும்பியது.

புதிதாக முறைப்பாடு எதுவும் கிடைத்தால் அல்லது ஏற்கனவே சாட்சியம் அளித்தவர்களிடம் ஏதாவது சந்தேகம் கேட்கவேண்டுமாயிருந்தால் மட்டுமே மீண்டும் யாழ்ப்பாணம் வருவோம் என்று விசாரணைக்குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதுவரை காலம் மேற்கொண்ட விசாரணைகள் பற்றிய பூரண அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(ஐ-3)

### ஜி. சீ. ஈ. (சா.த) மாணவர்களுக்கான

## தமிழ் மொழி முன்னோடித்தேர்வு 66 நிலையங்களில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் ஜி. சீ. ஈ. சாதாரணதர மாணவருக்கான தமிழ் மொழி முன்னோடித்தேர்வு பளை கல்விக் கோட்டம் உட்பட குடாநாட்டில் 66 நிலையங்களில் நடைபெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும் இப்பரீட்சைக்கு 6 ஆயிரத்து 257மாணவர்கள் தோற்றுகின்றனர்.

23 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் மேற்பார்வையாளர்களை அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கோட்டக்கல்வி பணிமனைகளில் சமுகந்தருமாறு பரீட்சைச் செயலாளர் சோ. பத்மநாதன் அறிவித்துள்ளார். (இ)

## இரு கடற் கரும்புலிகள் உட்பட ஐவர் பலியானதாக அறிவிப்பு

வவுனியா, ஒக். 21

கடந்த சனியன்று இரவு புல்மோட்டைக் கடற்பரப்பில் கடற்படையினருடன் இடம்பெற்ற பெரும் கடற் சண்டையில் இரு கடற்கரும்புலிகள் உட்பட 5 போராளிகள் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றுக் காலை அறிவித்தது.

கடற் கரும்புலிகளான மேஜர் சுரேன், கப்டன் சின்னவன் ஆகியோரும், கடற் புலிகளான மேஜர் வீரமணி (நாகமுத்து நகுலேஸ்வரன் — மட்டக்களப்பு), கப்டன் நவநீதன் (தங்கவேலாயுதம் சிவானந்தன் — யாழ்ப்பாணம்), கப்டன் பரமு (தம்பையா சுதாகரன் — யாழ்ப்பாணம்) ஆகியோருமே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இரவு 9 மணி முதல் மறுநாள் அதிகாலை 5 மணிவரை — 8 மணி நேரம் நீடித்த இக் கடற்சமரில் கடற்படையினரின் 'டோறா' படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும், இரண்டு டோறாக்கள் சேதமாக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-164)

## ஆஸ்பத்திரி படுகொலைகள் நினைவு நாள்

யாழ்ப்பாணம், ஒக். 21

இந்திய அமைதிப் படையினரால் யாழ்- ஆஸ்பத்திரிக்குள் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட 21 பணியாளர்களின் 10 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

ஆஸ்பத்திரிக்குள் புகுந்த இந்தியப் படையினர் கண்டபடி சுட்டும், கிரனேற்றுக்களை வீசியும் அனர்த்தம் புரிந்ததில் டாக்டர்கள், தாதிகள் ஊழியர்கள் துடிதுடித்து பலியாகினர்.

அவர்களின் நினைவு தினத்தையொட்டி இன்று ஆஸ்பத்திரியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். ஆஸ்பத்திரி பணியாளர்கள் இன்று கறுப்புப் பட்டி அணிந்து கடமையில் ஈடுபடுவர்.

(ஐ-15)

## பரிசளிப்பு விழா

கொழும்புத்துறை, ஒக். 21

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை பரிசளிப்பு விழா நாளை முற்பகல் 9 மணிக்கு அதிபர் கா. தவராசா தலைமையில் நடைபெறும்.

கொண்டலடி ஸ்ரீ விநாயகர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

யாழ். வலயம்-1 கல்விப் பணிப்பாளர் க. [illegible]ராசா, திருமதி யோகேஸ்வரி -இரத்தினராசா ஆகியோர் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வர். (உ-30)

## அதிர்ச்சியால் சிறுமி மரணம்

தென்மராட்சி, ஒக். 21

விளையாடிக் கொண்டிருந்த சகோதரனின் கன்னத்தில் துப்பாக்கி ரவை பாய்ந்து காயப்படுத்தியதை நேரில் பார்த்து அதிர்ச்சியடைந்த இருதய நோயாளியான அவரது எட்டு வயது சகோதரி அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாமல் மரணமடைந்த சம்பவம் கடந்த புதன்கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

மீசாலை வடக்கு கோயிலாமனையைச் சேர்ந்த கார்த்திகேசு பிரதீபா என்னும் பாடசாலை மாணவியே மரணமானவராவார்.

கொடிகாமம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தின்போது இவரது சகோதரன் கார்த்திகேசு சுஜீவன் (வயது 5) கன்னத்தில் ரவை பாய்ந்து காயமடைந்தது தெரிந்ததே. (ஐ-117)

## நாளை

**ஐப்பசி 5**

புதன்கிழமை

திதி: ஸப்தமி

பின் இரவு 2.31 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

முற்பகல் 9.00 வரை

[illegible]

ராகுகாலம்: 12.02-1.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## குடும்பப்பெண் மரணம்

அடுப்புக்குள் எண்ணெய் ஊற்றிய சமயம் உடலில் தீ பற்றியதால் காயமடைந்து கடந்த 12 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குடும்பப்பெண் இரு நாள்களுக்கு முன் அங்கு மரணமானார்.

கரவெட்டி கிழக்கில்வசித்து வந்த பலாலியைச் சேர்ந்த ஜெயசீலன் தேவரஞ்சினி (வயது 25) என்பவரே உயிரிழந்தவராவார். (ஐ-15)

## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ். மாநகரசபைப்பகுதியில் வளர்ப்பு நாய்க்கு ஏ. ஆர். வி. தடுப்பூசி போடும் திட்டத்தின் கீழ் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிமுதல் 10-30 மணிவரை சுண்டுக்குளி பழைய பூங்கா வீதி சனசமூக நிலையத்திலும்-

11 மணிமுதல் மாலை 3-00 மணிவரை கொய்யாத் தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும்.

நாளை புதன்கிழமை காலை 8-30 மணிமுதல் 10-30 மணிவரை அரியாலை (கண்டி வீதி) மகப்பேற்று நிலையத்திலும், 11 மணி முதல் மாலை 3 மணிவரை அரியாலை நாவலர் வீதி போசாக்கு நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும்.

## மலேரியா பரவுவதை தடுக்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் மலேரியா நோய் தீவிரமாக பரவுவதற்குக் காரணமான நுளம்பை ஒழிக்க விசேட திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவிருக்கிறது.

பெரிய அளவில் நுளம்பை ஒழிப்பதற்கா திட்டம் ஒன்றை வகுப்பது தொடர்பாக மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப் பட்டது.

நுளம்பை ஒழிக்க போதிய வாகனவசதியும், தொழிலாளர்களும் இல்லை என்றும்—

யாழ். நகரில் பல வீடுகள் பூட்டப்பட்ட நிலையில் உள்ளதால் அங்கு நுளம்பு உற்பத்தியாவதாகவும்—

இதனைத்தடுக்க பாரிய அளவில் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் — கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அரச அதிபர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டி பிரதேச செயலர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தப்பணிகளில் ஈடுபடுத்த சமயாசமய அடிப்படையில் சிற்றூழியர்களை நியமிக்க அனுமதி வழங்கப்படவேண்டும் என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்தார்.

இதையடுத்து உடனடியாக தொலைபேசி மூலம் வடக்கு-கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளருடன் தொடர்பு கொள்ளப்பட்டு 75 தொழிலாளர்களை நியமிக்க கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டது.

## பரீட்சை ஒத்திவைப்பு

மெய்வல்லுநர் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தெரிவு செய்வதற்காக ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் நடத்தும் பரீட்சை மீண்டும் திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக சங்கத்தின் அலுவலர் குழுத் தலைவர் பி. எச். டி. வைத்தியதிலக நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், அநுராதபுரம், கொழும்பு ஆகிய இடங்களில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இப் பரீட்சை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

பரீட்சைத் திட்டம் குறித்து எழுந்துள்ள சர்ச்சை காரணமாகவே பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதாக தெரியவந்தது.

## அற்புதம் நிறைந்த துர்க்கை

அற்புதம் நிறைந்த தெய்வம்
அளப்பருங் கருணைத் தெய்வம்
பொற்புறு பதங்கொள் தெய்வம்
போற்றரும் உயர்ந்த தெய்வம்
நற்கதி அருளும் தெய்வம்
நமக்கெலாம் தாயாம் தெய்வம்
துர்க்கையின் பாதம் போற்றித்
துயரினால் நீங்கு வோமே!

தெல்லியூர்ப் பதியை மேவித்
தீங்கெலாம் கணத்தில் நீக்கும்
வல்லியை வணங்கி நிற்போர்
வளமெலாம் விளங்கக் காண்பார்
சொல்லினுட் பொருளாய் உள்ளாள்
தொழுபவர் மனத்தே உள்ளாள்
நல்லவை அனைத்தும் நல்கும்
நம் மன்னை துர்க்கா தேவி!

புலவர் மா. பார்வதிநாதசிவம்

[தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தித் திருவிழா இன்றாகும். அதனை ஒட்டி இக் கவிதை வெளியிடப்படுகிறது]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் பத்மாவதி

மண்டைதீவைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம்-பத்மாவதி அவர்கள் 14-10-1997 இல் இணுவிலில் காலமானார்.

இவர் மண்டைதீவு பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சரவணமுத்து அன்னப்பிள்ளை ஆகியோரின் மூத்த மகளும், மண்டைதீவு அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சிவனடியார் - ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி மதுரநாயகி தியாகரமூர்த்தி, காலஞ்சென்ற திருமதி யோகாம்பிகை—ஞானலிங்கம், ஆறுமுகம் - பஞ்சாட்சரம், (முன்னாள் கிராம அபிவிருத்தி அலுவலர்), திருமதி பாக்கியலெட்சுமி கனகநாயகம், ஆறுமுகம் - கணேசமூர்த்தி (லண்டன்), திருமதி லெட்சுமிதேவி - பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வை. தியாகரமூர்த்தி, ந. ஞானலிங்கம், திருமதி ரூபாவதி பஞ்சாட்சரம், க. கனகநாயகம், திருமதி நகுலேஸ்வரி கணேசமூர்த்தி (லண்டன்), சோ. பரமேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும், சுஜாதா, கவிதா, தேவா, பகீரதன் (சுவிஸ்) பரணிதரன் (சுவிஸ்), யசோதரன், சர்மிளா, கௌசல்யா, பிரவீன், அனோஜா, அசோக்தா, அநபாயன், நிருஜா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-10-97 இல் இணுவில் மேற்கில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
பிள்ளைகள்

இணுவில் மேற்கு, இணுவில் (50688)

## கபிலாயர் பொன்னையா (சங்கீத பூசணம்)

[முன்னாள் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய இளைப்பாறிய ஆசிரியர்]

அராலி மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கீத பூசணம் கபிலாயர் பொன்னையா அவர்கள் 02-09-97 இல் வட்டுக்கச்சியில் காலமாகிவிட்டார்.

அன்னார் ஞானகியம்மாவின் அன்புச் சகோதரனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், சரோசினியம்மா, பிரபாகரன், சிறீரஞ்சினி, நித்தியானந்தன், தர்மவதி, ஞானப்பிரகாசம் (சவூதி அரேபியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசரத்தினம் (ஆசிரியர்), சிதம்பரநாதன் (ப. நோ. கூ. சங்கம், சங்கானை), லோகநாதன், நிலாவதனி, சரோசினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03-09-97 இல் வட்டுக்கச்சியில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி சி. சிறீரஞ்சினி (மகள்)

அராலி மத்தி,
அராலி. (50685)

## ஆ. க. கனகசபாபதி சிவகுமாரன்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் றோட்டை வசிப்பிடமாகவும் கொண்டவரான சிவகுமாரன் 20-10-97 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆ. க. கனகசபாபதி (ஆ. க. கனகசபாபதி அன் சன்ஸ் உரிமையாளர்) சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், வரதராஜன், செல்வராசா, விஜயராணி (கனடா), சறோஜினி, வசந்தா, கிருஸ்ணரூபி ஆகியோரின் சகோதரரும், விக்கினேஸ்வரன் (கனடா), கிருபாகரன், சோதியாம்பாள், கலைவாணி, ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-10-97 இன்று காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்சென்று தகனம் செய்யப்படும்.

தகவல்:
க. சிவபாக்கியம் (தாய்)

551, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (50693)

## சின்னத்துரை சிவசுப்பிரமணியம்

(கண்டியர், புன்னாலைக் கட்டுவன்)

புன்னாலைக் கட்டுவன் தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை சிவசுப்பிரமணியம் 20-10-1997 இல் காலமானார்.

அன்னார் சின்னத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி இராசேந்திர பூபதியின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவசினி, சிவரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும், பரமேஸ்வரனின் (ஆசிரியர், பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்) அன்பு மாமனாரும் செல்வி கதிர்தர்சியின் அன்புப்பாட்டனும் காலஞ்சென்ற திருமதி சரஸ்வதி, திருமதி பரிமளாதேவி (கனடா), காலஞ்சென்ற விக்கினராசா ஆகியோரின் சகோதரரும் இளைப்பாறிய அதிபர் அ. முதலித்தம்பி, அ. கனகசபை (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21-10-97 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: செ. பரமேஸ்வரன் (மருமகன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன். (50682)

## இணைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஏற்று அங்கீகரிக்கும்படி நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்துள்ள ஈ. பி. டி. பி, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய மூன்று தமிழ்க்கட்சிகளையும் அரசுத் தரப்பு வற்புறுத்தி வருகின்றதாம்.

இது தொடர்பாக—

யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுடன் அரச உயர் பீடத்தினர் நேற்று முன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அழவைாவியதாகக் கூறப்பட்டது.

இதனையடுத்து தமது யாழ்ப்பாண நிகழ்ச்சிகளை இடையில் முடித்துக்கொண்டு டக்ளஸ் தேவானந்தா இன்று கொழும்பு திரும்புகின்றார்.

அங்கு இன்று மாலை நடைபெறும் தெரிவுக்குழுக் கூட்டத்தில் அவர் பங்குபற்றுவார்.

இதேபோன்று வவுனியாவில் தங்கியிருந்த புளொட் கட்சியின் நாடாளுமன்ற தலைவர் ரி. சித்தார்த்தனும் நேற்றிரவு கொழும்பு வந்து சேர்ந்தார்.

வடக்குக் கிழக்கு இணைப்புக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற அரசின் யோசனையை எதிர்ப்பதில் இந்த மூன்று தமிழ்க்கட்சிகளும் விடாப்பிடியாக இருந்தாலும் சர்வஜன வாக்கெடுப்பு விடயத்தில் இவற்றுக்கிடையே சிறிது முரண்பாடு இருப்பதாகவும் தெரிகிறது.

### கூட்டணி நிலைப்பாடு

அம்பாறையிலுள்ள சிங்கள பகுதியை ஊவாவுடன் இணைக்கவும் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கி கிழக்கில் தனியான முஸ்லீம் கவுன்ஸில் அமைக்கவும் இணங்கியுள்ள கூட்டணி மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைபே சர்வஜன வாக்கெடுப்பு எதுவுமின்றி வடக்குடன் இணைக்க வேண்டும் என்கிறது.

### ஈ.பி.டி.பி. நிலைப்பாடு

தற்போதுள்ள வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் தாயகம். சர்வஜன வாக்கெடுப்போ எதுவுமோ இன்றி தற்போதைய நிலையில் தமிழர் தாயகம் பிரிக்கப்படாமல் அதன் ஐக்கியம் பேணப்படல் வேண்டும் என்று வலியுறுத்துகிறது ஈ.பி.டி.பி.

### புளொட் நிலைப்பாடு

இந்த விவகாரம் குறித்து உதயனுக்கு நேற்றிரவு கருத்து வெளியிட்ட புளொட் நாடாளுமன்றக் குழு தலைவர் ரி. சித்தார்த்தன், இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதை தாங்கள் முற்றாக நிராகரிப்பதாகக் கூறினார்.

முஸ்லிம்களின் அபிலாசைகளை, எதிர்பார்ப்புகளை நாம் மதிக்கிறோம் ஆனால் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு கண்ட பின்னரே முஸ்லிம் கவுன்ஸில் அமைப்பது பற்றி சிந்திக்கலாம் என்றும் அவர் சொன்னார். (உ-9)

## மர்மம்...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த நல்லியான் புஸ்பநாதன் (வயது 36) என்பவரே படுகாயமடைந்தார். படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யா/வடமராட்சி அருள்மிகு

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

தர்மகர்த்தா சபையினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை

இலங்கை புகழ்பெற்ற நாதஸ்வர மேதை திரு பத்மநாதன் அவர்களும் அவருடைய குழுவினர்களும் 16-10-97 இறுதி உற்சவ தினத்தன்று ஆலய வசந்தமண்டபத்தில் பிற்பகல் 2-00 மணிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். உற்சவ காலத்தில் தொண்டர்களாக ஆலயத்தில் பணிபுரிந்த ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் பாடசாலை மற்றும் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். பின்பு உற்சவ காலத்தில் சேவைகள் புரிந்தவர்களுக்கு புடைவைகள் கொடுத்து கௌரவிக்கப்பட்டார்கள் அதில் திரு. சோமசுந்தரம் (நகரசபை செயலாளர் பருத்தித்துறை) அவர்களும் அடங்குவர். பள்ளிக்கூட மாணவ தொண்டர்களுடனும், சாரணர்களுடனும் ஆலயத்திற்குவருகை தந்த பக்தர்களுடனும் இணைந்து முன்னின்று உதவிய ஆலய தொண்டர்கள் திரு. வைகுந்தநாதன் (வைகுந்தம், வரி உத்தியோகத்தர் உள்ளூராட்சித் திணைக்களம்), திரு நாகேந்திரராஜா (தங்கத்துரை, ஆசிரியர் ஹாட்லிக்கல்லூரி) ஆகியோரும் மதிப்புக்குரிய தலைவராலும், தர்மகர்தா சபையினராலும் பெயர் வாசித்து கௌரவிக்கப்பட்டார்கள்.

தர்மகர்த்தா சபை வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.

(49825)

## எமது புதிய வெளியீடு!!!

சரண்ராஜ், மதுரிமா நடித்த
❈ சஸ்பென்ஸ் (Suspense)
பயங்கரம் நிறைந்த மர்மத்திரைப்படம்
சந்தோஷ்ராஜ், விகாஸ், கீதா
❈ விடிவெள்ளி
ராம்கீ, வினோதினி
❈ சின்னமேடம்
என்றும் தரமான CD பிரதிகளுக்கு

### சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.

மற்றும் எமது ஓடியோ CD வெளியீடுகள்:

★ பத்தினி ★ ஸ்டைலு ஸ்டைலுதான்
★ காதல் பள்ளி ★ ஓ(ர)
★ விடுகதை ★ மாரியாத்தா

வீடியோ CD வெளியீடுகளாவன

★ அன்பேவா ★ ஆதிபராசக்தி
★ தர்மச்சக்கரம் ★ கல்யாணப்பரிசு
★ காதலன் ★ பாட்சா
★ நேருக்கு நேர்

(சி/1836)

## கண்ணீர் அஞ்சலி

### கனகசபை நடேசன்

(பங்காளர் யாழ் சிவகணேசன் ஸ்ரோர்ஸ்)

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சனுகா ஜுவலர்ஸ்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1835)

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்துரை - சிவசுப்பிரமணியம்

எமது கல்லூரி ஆசிரியர்.

**திரு. செ. பரமேஸ்வரன் B. A.**

அவர்களின் அன்பு மாமனார் அமரர் சின்னத்துரை- சிவசுப்பிரமணியம் 20-10-97 அன்று காலமான செய்தி கேட்டு நாங்கள் எல்லோருமே கலங்கி நிற்கின்றோம். இந்நிகழ்வை இயற்கை என்பதா? இயலாமை என்பதா? இறைவனுடன் இணைந்து விட்டார் என்பதா? எப்படியாயினும் இழப்பைத் தாங்காது துயருறும் ஆசிரியர் குடும்பத்தினருக்கும், மனைவி, பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கண்ணீர் அஞ்சலியாக்கி நிற்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
பெற்றோர் - பழையமாணவர்

**கலைமகள் வித்தியாலயம்**

பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

(50689)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-10-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org